www.tamilarangam.net

# ஈழத்தமிழரின் இன ஒடுக்கல் நினைவு நாள்

இலங்கையில் தமிழர்கள் சிங்களவரால் பல்லாண்டுக் காலமாக ஒடுக்கப் பட்டு வருகின்றனர்.

★ மலையகத்தமிழர்களின் குடியுரிமை 1948 இல் பறிக்கப் பட்டது

★ 1949 இல் அவர்களுடைய வாக்குரிமையும் பறிபோனது.

★ 1958 இல் இன ஒடுக்கலில் தமிழர்கள் வன்முறைக்கு உள்ளானார்கள்.

★ தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசின் உதவியுடன் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மொழியைக் காரணமாக வைத்துத் தமிழர்கள் வேலைவாய்ப்புகளில்-ஒடுக்கப்பட்டனர்.

★ தமிழர்களுக்கு மேற்கல்வி வசதிகள் மறுக்கப்பட்டன.

★ இதற்கு முன் இலங்கையே எப்போதும் கண்டறியாத அளவில் பெரிய இனக்கலவரம் ஒன்று சென்ற ஆண்டு ஆகசுடில் நிகழ்த்தப்பட்டது.

ஈழம் முழுவதும் சிங்களக் காவலரால் நடத்தப்பட்ட வெறியாட்டத்தில் தமிழர் பலர் சுடப்பட்டனர், கடைகள் எரிக்கப்பட்டன. கொள்ளையடிக்சப் பட்டன. விடுகள் தீயிடப்பட்டன. யாழ்ப்பாணச் சந்தையும் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள கடைகளும் கொளுந்தப்பட்டன.

சிங்களப் பகுதியிலும், மலையகத்திலும் வாழ்ந்த தமிழர்கள். சிங்களவரால் வெட்டப்பட்டும் குத்தப்பட்டும் சுடப்பட்டும் இறந்தனர். வணிக நிலையங்கள் கொளுத்தப்பட்டன; கொள்ளையடிக்கப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்.

இக் கலவரத்தில் 500 பேருக்குமேல் கொல்லப்பட்டிருர்கின்றனர். 100 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட செல்வம் சிதைக்கப்பட்டிருக்கிறது; கொள்ளை யடிக்கப்பட்டிருக்கிறது. 50,000க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.

இனக்கலவரத்தில கொல்லப்பட்டவர்களுக்கும் பிற இன்னல்களுக் காளாகித் தவிக்கும் ஏனைய ஈழத் தமிழர்களுக்கும் தமிழக ஈழ நட்புறவுக் கழகம் இந்த நினைவு நாளில் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

உயிரைப் பொருட்படுத்தாது. உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழர்க்குத் தம்மால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்யும்படித் தமிழ்ப் பெருமக்களைத் தமிழக ஈழ நட்புறவுக் கழகம் கேட்டுக்கொள்கின்றது.

---

## இன ஒடுக்கல் நினைவு நாள் கூட்டம்

நாள்: 20—8—78 மாலை 6-00 மணி

இடம்: மாவட்ட நடுவண் நூலகக் கட்டிடம், அண்ணா சாலை

தலைமை: **முனைவர் திரு இரா. இளவரசு,** (த. ஈ. ந. க.)

கருத்துரை: **முனைவர் திரு இரா. சனார்த்தனம்**

(உ. க தமிழிளைஞர் பேரவை)

**திரு மணவைத்தம்பி**

(இலங்கைக் குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கம்)

**திரு அரு. கோபாலன்**

(உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம்)

அனைவரும் வருக!

**தமிழக ஈழ நட்புறவுக் கழகம்**
75, ஆழ்வார்பேட்டைத் தெரு
சென்னை-600 018

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்